# K/SARASWATHY CENTRAL COLLEGE – PUSSELLAWA

இடர்க்கால விடுமுறைக்கான மாணவர் செயலட்டை – 2021

**தரம்:** 07 **பாடம்: சைவசமயம்**

## திருமுறை வைப்பு

**பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. திருமுறை என்பதன் பொருள் யாது?
2. திருமுறைகளை வேறு எவ்வாறு அழைப்பர்?
3. திருமுறைகளுள் அடங்குபவற்றை கூறுக.
4. திருமுறைகளை தொகுத்தவர், தொகுப்பித்தவர் யாவர்?
5. திருஞானசம்பந்தர் பாடிய திருப்பதிகங்கள் எத்தனையாவது திருமுறைகளுக்குள் அடங்கும்?
6. திருநாவுக்கரசர் பாடிய திருப்பதிகங்கள் எத்தனையாவது திருமுறைகளுக்குள் அடங்கும்?
7. சுந்தரர் பாடிய திருப்பதிகங்கள் எத்தனையாவது திருமுறைகளுக்குள் அடங்கும்?
8. தேவார முதலிகள் யாவர்?
9. தேவார முதலிகள் வழங்கிய திருமுறைகளை வேறு எவ்வாறு அழைப்பர்?
10. திருமுறைகளுக்கு பண் அமைத்தவர் யார்?
11. எட்டாம் திருமுறைகள் எவை, அதனை பாடியவர் யார்?
12. ஒன்பதாம் திருமுறைகள் எவை அதனை பாடியவர் யார்?
13. பத்தாம் திருமுறையான திருமந்திரம் யாரால் பாடப்பட்டது, எத்தனை தந்திரங்களை கொண்டது?
14. பதினோராம் திருமுறை எத்தனை பேரால், எத்தனை பிரபந்தங்கள் பாடப்பட்டன?
15. சேக்கிழார் பாடிய திருமுறை எத்தனையாவது, அது எது?
16. பெரியபுராணத்தை வேறு எவ்வாறு அழைப்பர்?
17. திருமுறை பாடல்களின் சிறப்புக்களை தருக?
18. திருமுறை பாடல்களை ஓதுவதற்கு முதலிலும் ஓதிய பின்பும் திருச்சிற்றம்பலம் கூறுவது ஏன்?

## திருமுறைகள்

**பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. திருமுறைகளை ஓதும் ஒழுங்கு முறைகளை தருக?

2. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரால் பாடப்பெற்ற ஈழத்துச் சிவாலயங்கள் எவை? எங்கிருந்த வண்ணம் அத்தேவாரங்களை பாடியருளினார்?
3. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரின் அற்புதங்களால் கவரப்பட்டு சைவத்திற்கு மாறிய மன்னன் யார்?
4. "நிரைகழ லரவம்..","விருது குன்றமா.." எனும் தேவாலயங்கள் பாடப்பட்ட சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக.
5. "நிரைகழ லரவம்.."என்னும் தேவாரத்தில் குறிப்பிடப்படும் சிவபெருமானின் சிறப்புகளை தருக.
6. "விருது குன்றமா.."என்னும் தேவாரத்தில் குறிப்பிடப்படும் புராணக்கதையைக் குறிப்பிடுக.
7. திருநாவுக்கரசு நாயனார் இத்தலத்தில் இருந்து திருக்கையிலாயக் காட்சியைக் கண்டு தரிசித்தார்?
8. திருநாவுக்கரசர் கடைப்பிடித்த மார்க்கம் எது?
9. "மாதர்ப் பிறைக்கண்ணி .." எனும் தேவாரம் பாடிய சந்தர்ப்பம் யாது?
10. "போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவாரவர்பின் புகுவேன்.."எனும் தேவார அடிகளின் கருத்து யாது?
11. "நங்கடம்பனைப் பெற்றவள்.."எனும் தேவாரத்தின் கருத்து யாது?
12. சுந்தரமூர்த்தி நாயனாரால் பாடப்பெற்ற ஈழத்துச் சிவாலயம் எது?
13. "நத்தார்படை ஞானன்பசு.."எனும் தேவாரத்தில் குறிப்பிடப்படும் சிவபெருமானின் சிறப்புகளை தருக.
14. திருக்கேதீச்சரத்தின் தீர்த்தம் யாது?
15. "பொன்னார் மேனியனே.."எனும் தேவாரம் பாடிய சந்தர்ப்பம் எது?
16. "பொன்னார் மேனியனே.."எனும் தேவாரத்தில் குறிப்பிடப்படும் சிவபெருமானின் சிறப்புகளை தருக.
17. திருவாசகத்தைப் பாடியவர் யார்?
18. "பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும் புழுத்தலைப் புலையனேன்.."எனும் பாடலடியில் குறிப்பிடப்படுபவர் யார்?
19. "அம்மையே அப்பா ஒப்பிலா மணியே.."எனும் பாடலில் குறிப்பிடப்படும் சிவபெருமானின் சிறப்புகளை தருக.
20. அச்சோப்பதிகம் என்பதற்கான காரணம் யாது?
21. "சித்தமலம் அறுவித்துச் சிவம் ஆக்கி எனை ஆண்ட அத்தன்.."எனக் குறிப்பிடப்படுபவர் யார்?
22. திருவிசைப்பா என்பதன் பொருள் யாது?
23. திருவிசைப்பா பாடல்களை எத்தனை பேர் பாடியருளியுள்ளனர்?
24. இறைவன் எங்கு திருநடனம் புரிவதாக "அன்ன நடை யார்.." எனும் பாடலில் குறிப்பிடப்படுகின்றது?

25. "புலித்தோல் பியற்கிட்டு.." எனக் குறிப்பிடப்படும் கடவுள் யார்?
26. "மின்னின் இடையாள்.."எனச் சிறப்பிக்கப்படுபவர் யார்?
27. சேந்தனார் திருப்பல்லாண்டு பாடி தேரினை ஓடச் செய்த தலம் எது?
28. பல்லாண்டு என்பதன் பொருள் யாது?
29. "திருவாரூரின் மழவிடை யார்க்கு.." எனக் குறிப்பிடப்படுபவர் யார்?
30. "குழலொலி யாழொலி.." எனும் திருப்பல்லாண்டின் பண் யாது?
31. பெரியபுராணத்தை அருளியவர் யார்?
32. பெரியபுராணத்தின் வேறு பெயரினை தருக.
33. பெரியபுராணம் பாட அடியெடுத்துக் கொடுத்தவர் யார்?
34. "புனிதவாய் மலர்ந்தழுத.."எனும் பாடலடியில் குறிப்பிடப்படுபவர் யார்?
35. "வேதநெறி தழைத்தோங்க.." எனும் பாடலில் யாருடைய சிறப்புக் கூறப்படுகின்றது?அஅவை எவை?
36. நாம் எவற்றைத் தோத்திரப்பாடல்கள் எனக் குறிப்பிடுகின்றோம்?
37. திருப்புகழில் "இறவாமல் பிறவாமல்" எனும் பாடல் எத்தலத்தின் மீது பாடப்பட்டது?
38. "குறமாதைப் புணர்வோனே.."எனும் பாடலடியில் குறமாது எனக் குறிப்பிடப்படுபவர் யார்?
39. "இறவாமல் பிறவாமல்.."எனும் பாடலில் குறிப்பிடப்படும் கடவுள் யார்? அவர் பற்றி இப்பாடலில் குறிப்பிடப்படும் சிறப்புகளைக் கூறுக.

## காரைக்கால் அம்மையார்

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. புனிதவதியாரின் தந்தையின் பெயர் என்ன?
2. புனிதவதியாரின் கணவர் பெயர் என்ன?
3. காரைக்கால் அம்மையார் எனப்பெயர் வரக்காரணம் என்ன?
4. காரைக்கால் அம்மையாரிடம் காணப்பட்ட சிறந்த பண்புகளை எழுதுக.
5. காரைக்கால் அம்மையார் பாடிய பிரபந்தங்கள் எவை?
6. அம்மையார் எந்த கடவுளின் மீது பக்தியுடன் காணப்பட்டார்?
7. பரமதத்தனான கணவரின் விருப்பத்திற்கேற்ப இறைவனிடம் அம்மையார் எதனை பெற்றுக் கொடுத்தார்?
8. இறையருளால் அம்மையார் பெற்ற வடிவம் எது?
9. சிவனால் அம்மையார் எவ்வாறு அழைக்கப்பட்டார்?
10. புனிதவதியார் திருவாலங்காட்டில் இறைவனது திருநடனத்தைத் தரிசித்து பாடிய பாடல் என்ன?
11. பரமதத்தன் வீட்டிற்கு அனுப்பி வைத்தவை எவை?

12. பரமதத்தன் ஏன் வேறு திருமணம் செய்தான்?
13. இவ்வுலக வாழ்வை வெறுத்த அம்மையார் எந்த உருவை பெற்றார்?
14. அம்மையார் எந்த காலப்பகுதியில் வாழ்ந்தவர்?
15. பரமதத்தன் தனது குழந்தைக்கு புனிதவதியார் என பெயர் வைத்ததன் காரணம் என்ன?

## ஆலய வழிபாடு

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக

1. ஆலயம், கோயில் என்பவற்றின் பொருள் யாது?
2. நீங்கள் ஆலயத்திற்குக் கொண்டு செல்லக்கூடிய பூசைப்பொருட்களைக் குறிப்பிடுக.
3. ஆலயம் பற்றி ஔவை பிராட்டியார் கூறிய கருத்து யாது?
4. ஆலயங்களின் இராஜ கோபுரத்தை எவ்வாறு அழைப்பர்?
5. ஆண்கள் எந்த எந்த அவயவங்கள் நிலத்தில் பொருந்தும் வண்ணம் அட்டாங்க நமஸ்காரம் செய்ய வேண்டும்?
6. பெண்கள் எந்த எந்த அவயவங்கள் நிலத்தில் பொருந்தும் வண்ணம் பஞ்சாங்க நமஸ்காரம் செய்ய வேண்டும்?
7. ஆலய வீதிகளில் எத்தனை முறை வலம் வருதல் வேண்டும்?
8. ஆலயத்தில் செய்யப்படும் தொண்டுகள் எவை?
9. ஆலயத்தில் செய்யக்கூடிய சரியை, கிரியைத் தொண்டுகளைப் பட்டியற்படுத்துக.
10. ஆலய வழிபாட்டின் மூலம் பெற்றுக் கொள்ளப்படும் பயன்கள் யாவை?
11. ஆலய வழிபாட்டின் போது மேற்கொள்ளப்படும் நமஸ்காரங்கள் யாவை?
12. நமக்கு இந்த சரீரம் கிடைத்தமைப் பற்றி நாவலர் கூறும் கருத்து என்ன?

வெற்றிடங்களை நிரப்புக.

(சண்டேசுவரர்,திரியாங்க,ஆன்ம ஈடேற்றம்,கோபுரத்தை, ஆலயம்)

1. வெளிவீதி வலம் வரும்போது இருபாலாரும் ……… நமஸ்காரம் செய்தல் வேண்டும்.

2. ஆலயத்தினை அண்மித்ததும் தூலலிங்கமாகிய……… முதலில் வணங்க வேண்டும்.

3. ………… சந்நிதியை அடைந்து வணங்கி, துதித்து மும்முறை கைதட்டி சிவதரிசன பலனைத் தரும்படி வேண்டுதல் செய்ய வேண்டும்.

4. **மனிதன்.........அடைய ஆலயவழிபாடு மிகவும் அவசியமாகின்றது.**

5. **இறைவன் குடிகொண்டிருக்கும் இடம்.......... எனப்படும்.**